**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC. 234 /2016**

**Deposition of C.W.** 1

Name : திரு. ஆறுமுகம்

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated:**13.08.2025**

**Accused Present.**

முதல் விசாரணை–

நான் சென்னை மணலி நியூடவுன் காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். 09.07.025ம் தேதி இந்நீதிமன்றத்தில் ஆஜராக அழைப்பாணை பெற்றுக்கொண்டேன். அன்றைய தினம் அந்த பகுதியில் சட்ட ஒழுங்கு பிரச்சனை இருந்ததால் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. அதற்காக தகவலை நீதிமன்றத்திற்கு தெரிவித்து விட்டேன். பின்னர் 23.07.2025ம் தேதி நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டியிருந்தது. அப்போது ஒரு குற்ற வழக்கு தொடர்பாக எதிரி ஒருவரை கைது செய்து வைத்திருந்ததால் நீதிமன்றத்திற்கு வரவில்லை. எனது மூத்த அதிகாரியிடம் சொல்லி தகவல் கொடுக்க சொன்னேன். ஆனால் அவர் தகவல் கொடுக்கவில்லை.

**CASE NO.SC. 234/2016**

**Deposition of P.W.** 9

Name : திரு ஆறுமுகம்

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated:13**.08.2025**

Accused Present.

<u>முதல் விசாரணை</u>–

நான் சென்னை மணலி நியூடவுண் காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்னர் கொற்றிக்கோடு காவல்நிலையத்தில் 18.10.2012ம் தேதி 17.30 மணிக்கு நான் நிலைய பொறுப்பில் இருந்த போது வேளிமலை கிராம நிர்வாக அலுவலர் கூடுதல் பொறுப்பு ஆர். சந்திர பிரபா என்பவர் கொடுத்த புகார் மனுவை பெற்றுஅதன் தன்மைக்கு ஏற்ப நிலைய குற்ற எண். 220/2012 பிரிவுகள் 4 உ/அ 21 (2) கனிமங்கள் மற்றும் சுரங்கங்கள் சட்டம் 1957 மற்றும் பிரிவு 3 (1) தமிழ்நாடு பொது சொத்துக்களை சேதப்படுத்துவதை தடை செய்யும் சட்டம் படி முதல்தகவல் அறிக்கை பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.5. காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.



<u>**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**</u>

கிராம நிர்வாக அலுவலர் கொண்டு வந்த புகார் மனுவின் மீது மறுபரிசீலனை செய்தேன் என்று கூறியுள்ளேனா என்றால் பரிசீலனை செய்தேன் என்று கூறியுள்ளேன். மறுபரிசீலனை செய்ததாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. வேறு ஒரு மனு கொடுக்கப்பட்டு அதில் நான் நடவடிக்கை எடுக்காததால் இரண்டாவதாக பெற்ற மனுவை மறுபரிசீலனை செய்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. ஆய்வாளர் என்னை 19.10.2012ம் தேதி விசாரித்தார். எனது வாக்குமூலம் நீதிமன்றத்திற்கு 24.03.2016ம் தேதி கிடைத்துள்ளது என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததை தவிர நான் வேறு ஒன்றும் செய்யவில்லை. நான் சொன்னது போல் மனு எதுவும் பெறபடவில்லை என்றால் சரியல்ல. வழக்கின் தேவைக்கு ஏற்ப பின்னர் தேவைப்பட்ட விதத்தில் மாற்றி தயாரித்து கொண்டேன் என்றால் சரியல்ல.